**தலைப்பு 204 - இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம்**
**.......................................................................................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**...........................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**.....................................................**

தலைப்பு 204 - இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஏப்ரல் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஏப்ரல் 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்

பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூறறுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 07/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றிக்கையின் பிரகாரம் | உரிய வாகனத்தை திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சிற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் பதிவு செய்தல் உரிமை |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் பதிவு செய்யப்பட உரிமை தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் தேசிய ஒருங்கிணைப்பு, அரச கரும மொழிகள், சமூக செயல் முன்னேற்றம் மற்றும் இந்து விவகார அமைச்சினால் 2019 சனவரி 22 ஆந் திகதி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட KF 9142 ஆம் இலக்க வாகனத்தின் உரிமை தீர்த்துவைக்கப்பட்டு பெறுமதி நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு இவ்வறிக்கைத் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | தீர்த்துவைக்கப்பட்டு கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

.............................................................................

திணைக்களத்தினால் கீழே தரப்படும் ஏடுகள் பேணப்படாதிருந்தமை/ முறைப்படியாக பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ........................................... | .................................. | ...................... |
| **(I) நிலையான சொத்துக்கள் பதிவேடு**<br>...................................... | | |
| 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியுலின் மூலம் சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்படவில்லை. | பதிவேடுகளைப் பேணுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியூல் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |

**(II) பிணைப் பதிவேடு**

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 89(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. | பதிவேடுகளைப் பேணுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப்பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 (2) | வருடாந்த பொருள் மீளாய்வுச் சபையானது நேரடியாக களஞ்சியத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்கள் அவர்களுக்கு அண்மித்த கீழ் மட்ட உத்தியோகத்தர்களைத் தவிர்த்து ஏனைய பொறுப்புக் கூறக்கூடிய இரண்டு உத்தியோகத்தர்களை உள்ளடக்கி இருக்க வேண்டியதுடன் அவ்வாறான உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் இல்லையாயின் ஏனைய அரசாங்க | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் களஞ்சிய முதுகாமைத்துவத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியதல்லாத உத்தியோகத்தர்கள் மீளாய்வு நடவடிக்கைகளுக்காக நியமிப்பதற்கு 2023 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மீளாய்வுச் சபை உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களங்களிலிருந்து உத்தியோகத்தர்களை நியமிக்கலாம். எவ்வாறாயினும் திணைக்களத்தினால் நிறுவனத்தின் கணக்காளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஆகியோர் பொருள் மீளாய்வுச் சபைக்காக நியமிக்கப்பட்டு தலைவராக கணக்காளர் நியமிக்கப்பட்டிருந்தார். | | |
| (ii) | 30/2016 ஆம் இலக்க திசெம்பர் 29 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | வாகனங்கள் சம்பந்தமாக மாதாந்த போக்குவரத்துச் சேவைக் குறிப்பினை 2022 ஆம் ஆண்டிற்காகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் தொடர்பான மாதாந்த செயலாற்றல் பொழிப்பினை முடியுமான அளவு விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2017 பெப்ரவரி 15 ஆந் திகதிய PFD/INFR/TRPT/CC/02 ஆம் இலக்க அரசாங்க நிதி மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதம். | அரசாங்க நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க காப்புறுதி பூட்கையினைப் பெற்றுக்கொள்ளும் போது கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத் தன்மை ஆபத்து முகாமைத்துவத்தினைப் போல் கிரய செயற்திறனினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை காப்புறுதிச் சேவைகளை வழங்குகின்ற | 2023 ஆம் ஆண்டிலிருந்து விலை மனுக்கோரும் முறைமை அமுல்ப்படுத்தப்பட்டது. | தமது நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க காப்புறுதி பூட்கைகளைப் பெற்றுக்கொள்ளும் போது சுற்றறிக்கைக்குஇணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் பீபல்ஸ் இன்சுவீரன்ஸ் லிமிடட் ஆகிய நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்களை கோருவதன் மூலம் போட்டியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் விலை மனுக்கள் கோராது வாகன காப்புறுதி நடவடிக்கையானது தேசிய காப்புறுதி நடவடிக்கைகளானது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**......................................**

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

**.......................................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ............................................. | .............................................. | ...................... |
| 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படாது காணப்பட்ட முச்சக்கர வண்டியை திருத்தம் செய்வதற்கு, கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது பொருத்தமான ஒழுங்குளை மேற்கொள்வதற்கு இந்த அறிக்கைத் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முச்சக்கர வண்டியை மருதானை இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களான பணிப்பாளர், கணக்காளர், சாரதி ஆகியோரை உள்ளடக்கிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

**4. நல்லாட்ச்சி**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது முதலாம் காலாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2023 மார்ச் 28 ஆந் திகதி நடாத்தப்பட்டது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். |

**5. மனித வளங்கள் முகாமைத்துவம்**

**.......................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ............................................. | .................................... | ...................... |
| (அ) | 2021 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் 5 ஆண்டுகள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஏனைய சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 5 ஆண்டுகளிலிருந்து 9 ஆண்டுகள் வரை, 10 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகள் வரை மற்றும் 31 ஆண்டுகளிலிருந்து 40 ஆண்டுகள் வரை முறையே 90 உத்தியோகத்தர்கள் 27 உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்களாக 119 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய படிவத்திற்கு இணங்க 05 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களின் இடமாற்ற வேண்டுதல் அரசாங்க நிருவாக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களின் இடமாற்றம் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 184 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | அரசாங்க நிருவாக அமைச்சிற்கு பல தடவைகள் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உள்ளபடியான பதவியணியினர் 158 ஆக இருந்ததினால் 24 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. இவ்வாறு வெற்றிடமாகக் காணப்படுதல் திணைக்களத்தின் செயலாற்றல் குறைவடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.